# 12ஆம் வகுப்பு ___ தமிழ்
## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழன் துணை வேண்டும் என்கிறார்?
தமிழின் துணை:

❖ தினமும் உடல் வருத்தி உழைப்பதால், சிவந்த கைகளை உடைய தொழிலாளரின் தோள் மீது காணப்படும் முத்துப் போன்ற உழைப்பின் பெருமையை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார் சிற்பி.

2. கவிஞர் சிற்பி எத்தனை முறைச் சாகித்திய அகாதெமி விருது பெற்றார்?

❖ சாகித்திய அகாதெமி விருது: ( இரண்டு முறை)
❖ மொழிப்பெயர்ப்புக்காகவும் (அக்கினிசாட்சி)
❖ ஒரு கிராமத்து நதி என்னும் கவிதை நூலிற்காகவும் இரு முறை சாகித்திய அகாதெமி விருது பெற்றார்.

3. தமிழ் மொழியின் பழைமை நலம் எவை?

❖ தமிழ்மொழி பாண்டியனின் அவையில் செம்மொழியாய் ஆட்சி செய்தது.
❖ பாரி போன்ற வள்ளல்கள் பலரைத் தமிழ் மண்ணிற்குத் தந்தது.

4. நடை அழகியல் பற்றி தொல்காப்பியர் கூறும் கருத்தைக் குறிப்பிடுக?

❖ நடைபெற்றியலும் (கிளவி--26)
❖ கவிதையின் இயங்காற்றல்தான் நடை (தொல்)
❖ ஆசிரிய நடைத்தே வஞ்சி -ஏனை
❖ வெண்பா நடைத்தே கலி - செய்--107

5. ஒலிப்பின்னல் என்றால் என்ன?

❖ இசையோடும் இசைகருவியோடும்தான் மொழி சார்ந்த கவிதைப் பிறக்கிறது.
❖ ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்வதை ஒலிப்பின்னல் என்கிறோம்.

6) அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் நூல்கள் யாவை?

❖ தண்டியலங்காரம்
❖ மாறனலங்காரம்
❖ குவலயானந்தம்

7) அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?

❖ தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம்.

8) பொருள் வேற்றுமை அணி ___ விளக்கம் தருக.

❖ இரு வேறு பொருள்களின் ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி ஆகும்.

9) பிழைகளை எவ்வாறு தவிர்க்கலாம்?

❖ மொழியின் இயல்பை உணர்த்தும், இலக்கண விதிகளை அறிந்தும் கவனமுடன் எழுதினால் பிழைகளைத் தவிர்க்க முடியும்.

❖ சொல் உருவாகும் முறையை அறிந்தும் பொருள் வேறுபாட்டை உணர்ந்தும் எழுதும் போது பிழைகளைத் தவிர்க்க முடியும்.

10) பசுமைக்குடில் வாயுக்கள் என்பவை யாவை?
- ❖ கார்பன் - டை- ஆக்சைடு
- ❖ மீத்தேன்
- ❖ நைட்ரஸ் ஆக்சைடு
- ❖ ஓசோன்
- ❖ நீர்வாயு

11) கார்பன் அற்ற ஆற்றல்கள் யாவை?

கார்பன் அற்ற ஆற்றல்கள்:
- ❖ சூரிய ஆற்றல்
- ❖ காற்று ஆற்றல்
- ❖ ஹைட்ரஜன் ஆற்றல்
- ❖ தாவர ஆற்றல்

12) புவி வெப்பமடைவதற்கு காரணம் யாது?

❖ மனிதனின் பேராசை காரணமாக, இயற்கை வளங்களைக் கடுமையாக சேதப்படுத்தினான்.

❖ புவி வெப்பமடைதல்,ஸ்ரீமனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே" என்று இங்கிலாந்து அறிவியலாளர்ஸ்ரீடேவிட்கிங்" திட்டவட்டமாகக் கூறுவதனால் தெளியலாம்.

13) நகரம் பட்டைத் தீட்டிய வெள்ளை வைரமாகிறது ___ விளக்கம் தருக.

❖ பெய்த மழையால் நகர மாசுகள் அகன்றன.

❖ மழைக்காலமாயினும் திடிரென வெளிப்பட்ட சூரிய வெளிச்சத்தால் புது பொலிவு பெறுகிறது.எனவே நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாய் விளங்குகிறது .

14) நெடுநல் வாடை ___ பிரித்துப் பொருள் தருக.

❖ நெடுநல்வாடை ___ நெடுமை + நன்மை + வாடை

❖ போர் பாசறையில் தங்கிய தலைவன் வெற்றி பெற ஏதுவானதால் (நல்வாடை.)

❖ தலைவனைப் பிரிந்த தலைவிக்கு துன்பம் தருவதால் -(நெடுவாடை.) எனவே நெடுநல்வாடை ஆயிற்று.

15) மொழியின் அடிப்படைப் பண்புகள் எவை? அவை எதற்கு உதவும்?

❖ திணை, பால், எண், இடம் ஆகியவை மொழியின் அடிப்படைப் பண்புகளாகும்.

❖ சொற்களை விளக்குவதற்கும், பயன்படுத்துவதற்கும் இவை உதவும்.

16) புக்கில், தன்மனை ___ சிறுகுறிப்பு வரைக.

❖ தற்காலிகத் தங்குமிடம் அல்லது தற்காலிகப் புகலிடம் புக்கில் எனப்படும்.

❖ திருமணத்திற்குப்பின் கணவனும் மனைவியும்

❖ பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழுமிடம் தன்மனை எனப்படும்.

17) "மணந்தகம்" என்றால் என்ன?

❖ குடும்பத்தின் தொடக்கமாகத் திருமணம் புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கமே மணந்தகம் எனப்படுகிறது.

18) சிலம்புக்கழி நோன்பு என்பது என்ன?

❖ திருமணத்திற்குப்பின் மணப்பெண் கணவனுடைய இல்லத்திற்கு வரும்போது அவனுடைதாய், பெண்ணிற்குப் பூச்சூட்டி, பழைய கன்னிச் சிலம்புகளைக் களைந்து, புதுச் சிலம்பு பூட்டுவது சிலம்புகழி நோன்பாகும்.

19) நிலையாமை குறித்துச் சவரி உரைக்கும் கருத்து யாது?

❖ இராமனைக் கண்டதால் தன் பொய்யான உலகப்பற்று அழிந்தது என்றும்.

❖ இவ்வளவு காலம் தான் மேற்கொண்டிருந்த தவம் பலித்துப் பிறவி ஒழிந்தது என்றும் கூறி, நிலையாமை குறித்த கருத்தை வெளிப்படுத்தினாள்.

20) அமலன் நேர்ந்த உரை யாது?

❖ உடன்வர விரும்பிய குகனைப் பார்த்து அமலன்இராமன், என் உயிர் போனற நீ என் இளவல், என் இளவல் இலக்குவன் உன் தம்பி,
❖ அழகிய நெற்றியையுடைய சீதை உன் அண்ணி,
❖ கடல் சூழ்ந்த உலகம் முழுமையும் உன்னுடையது.
❖ நான் உன் கட்டளைக்கு ஏற்ப பணிபுரிவேன் என்று உரைத்தான்.

21) ஞாலத்தின் மாணப் பெரிது எது?

❖ உரிய காலத்தில் செய்த உதவி, அளவில் சிறியதாக இருந்தாலும் உலகத்தை விட மிகப் பெரியதாகும்.

22) பாடாண் திணை- விளக்கம் தருக?

❖ பாடு+ஆண்+திணை = பாடாண்திணை

❖ பாடப்படும் ஆண் மகனின் ஒழுகலாற்றைப் பற்றி கூறுவதால் பாடாண்திணை என்ற ஆனது.

❖ ஒருவருடைய புகழ், கொடை, சிறப்பு, அருள் முதலிய நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

23) சங்க காலத்தின் காலக்கண்ணாடியாக விளங்குவது புறநானூறு ஏன்?

❖ சங்க கால மக்களின் வாழ்க்கை: வரலாறு,போர்,வீரம்,நாகரீகம்,பண்பாடு முதலியவற்றை விளக்கமாக எடுத்துக்காட்டுவதால் புறநானூறு சங்க காலத்தின் காலக்கண்ணாடியாக விளங்குகிறது.

24) இடையீடு ___ எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?

இடையீடு என்ற கவிதையானது கவிதை பற்றிய

❖ எண்ணம்
❖ வெளியீடு
❖ கேட்டல் ஆகிய குறியீடுகளைக் கொண்டு அமைந்துள்ளது.

25) அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

தமிழில்,

❖ நிகண்டு, நன்னூல், தண்டியலங்காரம், நீதிநூல்கள், காரிகை.

கணிதத்தில்,

- ❖ கீழ்வாயிலக்கம்
- ❖ மேல்வாயிலக்கம்
- ❖ குழிமாற்று

26) எழுத்தாணிகளின் பேதங்கள் யாவை?

- ❖ ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணியில் பல வகைகள் உண்டு.
- ❖ எழுத்தாணியை ஊசியென்றும் கூறுவர்.

வகைகள்:

- ❖ மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி என மூவகைப்படும்.

27) மறக்கக் கூடாதது எது, மறக்கக் கூடியது எது?

மறக்கக் கூடாதது:

- ❖ ஒருவர் நமக்குச் செய்த நன்மையை (உதவியை) மறக்கக் கூடாது.

மறக்கக் கூடியது:

- ❖ பிறர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது.

28) வசனம், கவிதை வேறுபாடு தருக.

- ❖ சொற்களைச் சிறந்த முறையில் அமைப்பது வசனம்.
- ❖ சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் அமைப்பது கவிதை.

29) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

❖ "காலின் மெக்கன்சி"யின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு 1869 -இல் உருவாக்கப்பட்ட இந்நூலகம் அரிய ஓலைச்சுவடிகள், தாள்சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகளைக் கொண்டது.

30) சென்னையில் பழைமையை நமக்கு உணர்த்துவன யாவை?

❖ இந்திய அகழ்வாய்வுத் துறையினரால் பல்லாவரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்கோடாரி.

❖ கூடுவாஞ்சேரி, பல்லாவரம்,புழல் போன்ற பகுதிகளில் இன்றும் கிடைக்கும்

❖ பழங்கால மானுட எச்சங்கள் சென்னையின் பழைமையை நமக்குஉணர்த்துகின்றன.

31) இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகைய உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

❖ இறைவனின் திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்களின் உறவு தனக்கு வேண்டும் என்கிறார் வள்ளலார்.

32) இறைவனிடம் வள்ளலார் தனக்கு வேண்டாம் என வேண்டுவன யாவை?

வஞ்சகர் உறவு:

❖ தன் மனதில் ஒன்றை நினைத்துக் கொண்டு வெளியில் வேறொன்றாகப் பேசும் வஞ்சகர்களின் உறவு தனக்கு வேண்டாம்

- ❖ பொய்,
- ❖ மதமான பேய்,
- ❖ பெண்ணாசை

இவையெல்லாம் தனக்கு வேண்டாம் என இறைவனிடம் வேண்டுகிறார்.

33) கலிவிழா,ஒலிவிழா - விளக்கம் தருக.

கலிவிழா:

- எழுச்சி தரும் விழா
- மக்களுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் கொண்டாடப்படும் விழா

ஒலிவிழா:

- ஆரவாரவிழா
- வாழ்த்துப்பாடல்களின் இசையும் ஆரவாரங்களோடு கொண்டாடும்விழா.

34) "பெருங்கடல் வேட்டகத்துச் சிறுகுடிப் பரதவர்" - இத்தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.

- பெருங்கடல் x சிறுகுடி
- பரப்பளவில் பெரிய கடலில் மீன் வேட்டையாடுபவர்.
- நிலப்பரப்பில் சிறிய குடியில் வாழ்வர்.

35) அகநானூறு எத்தனை பிரிவுகளை உடையது? அவை யாவை?

மூன்று பிரிவுகள் உடையது. அவை,

- களிற்றியானை நிரை -120 பாடல்கள்
- மணிமிடைபவளம் - 180 பாடல்கள்
- நித்திலக் கோவை - 100 பாடல்கள்

36) படிமம் என்றால் என்ன?

படிமம்:

- படிமம் என்றால் காட்சி என்பது பொருள்.
- விளக்க வந்த ஒரு காட்சியையோ, கருத்தையோ
- காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தி படிமம்.

37) படிமம் எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?

படிமம்:

- வினை
- பயன்
- மெய்(வடிவம்)
- உரு(நிறம்) ___ ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

38) காப்பியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

- காப்பியம் இரண்டு வகைப்படும்,அவை

1.பெருங்காப்பியம்
2.சிறுகாப்பியம்

39) காப்பியத்தைக் குறிக்கும் வேறுபெயர்கள் யாவை?

1.கதைச் செய்யுள்
2.மகா காவியம்
3.தொடர்நடைச் செய்யுள்
4.விருத்தச் செய்யுள்

40) காப்பியத்தின் சிற்றுருப்புகள் சிலவற்றை எழுதுக.

- காதை
- சருக்கம்
- இலம்பகம்
- படலம்

41) பாவிகம் -- விளக்குக.

❖ காப்பியத்தில் கவிஞன் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்தினையே பாவிகம் என்பர்.

❖ காப்பியத்தின் பண்பாகப் பாவிகம்"என்பதைத் தண்டியலங்காரம் குறிக்கின்றது.

42) மனத்தை அதன் போக்கில் செல்லவிடக் கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?

❖ தீமையில் இருந்து விலக்கி, நல்ல வழியில் செலுத்த, மனத்தை அது போகும் போக்கில் செல்லவிடாமல் காக்கவேண்டும் என வள்ளுவம் கூறுகிறது.

43) மன உறுதியின் தேவை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது?

❖ நல்ல செயல்பாட்டிற்கு மன உறுதியே வேண்டும். மற்றவை எல்லாம் பயன்படாது.

44) பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?

❖ பகைவராலும் அழிக்க முடியாத அரண் அறிவு ஆகும். ஏனெனில் அறிவு ஒருவனுக்கு அழிவு வராமல் காக்கும் கருவியாகும்.

45) அஞ்சத் தகுந்தன, அஞ்சத்தகாதன என வள்ளுவர் குறிப்பிடுவது யாது?

- அஞ்சத் தகுந்தன: உறவுடையவர் போல் நடித்து உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்சவேண்டும்.
- அஞ்சத் தகாதன: வாளைப்போல் வெளிப்படையாகத் துன்பம் செய்யும் பகைவருக்கு அஞ்ச வேண்டியதில்லை.

46) வறுமையும் சிறுமையும் தருவது எது?

- ஒருவருக்கு வறுமையும் சிறுமையும் தருவது சூது.

46) "பருவத்தே பயிர் செய்"- நேர மேலாண்மைப் பொருத்தி எழுதுக.

❖ ஏற்ற காலம் அறிந்து ஏற்ற இடத்தைத் தெரிந்து ஒரு செயலை மேற்கொண்டால் உலகத்தையே அடைய நினைத்தாலும் கைகூடும் என்பதாகும்.

47) அறிவுடை வேந்தனின் நெறி குறித்து பிசிராந்தையார் கூறுவன யாவை?

- அறிவுடை வேந்தன், மக்களிடம் வரி திரட்டும் நெறிமுறை அறிந்து வரியைத் திரட்டினால்,நாடு பெருஞ்செல்வத்தைப் பெற்றுச் செழிப்படைவதோடு அவன் எண்ணமும் நிறைவேறும் எனப்பிசிராந்தையார் கூறுகிறார்.

48) செவியறிவுறூஉ துறையை விளக்குக.

❖ அரசன் தவறுதலாகச் செயல்பட நேரும்போது செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யும் வகையில், அரசனுக்கு அறிவுரையாகக் கூறுவது —செவியறிவுறூஉத் துறையாகும்.

49) தொன்மம்-- விளக்கம் தருக.

❖ கடவுளர்கள்,தேவர்கள்,மக்கள்,விலங்குகள் ஆகிய பல்வகை உயிரினங்களையும் ஒருங்கிணைத்து படித்தால் நம்ப முடியாதது போல் தோன்றுகின்ற செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் கொண்டு இயங்குகின்ற பழமையான கதைகளையே "தொன்மம்"என்பர்

50) பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.
1.துரியோதனன் வருகிறான் 2. ஹிட்லர் செல்கிறான்.

51) குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.

❖ சுட்டிய பொருளுக்கும் குறியீட்டுப் பொருளுக்கும் ஏதேனும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும்.

❖ சுட்டும் பொருள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாக இருத்தல் வேண்டும். குறியீட்டுப்பொருள் நுண்ணிய முறையில் வெளிப்படுத்தபட வேண்டும்.

52) விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாகக் கொண்டேன்-- யார், யாரைப்பற்றி, எதற்காகக் கூறுகிறார்?

❖ கூறியவர் : பாரதிதாசன்

❖ மயிலை சீனி. வேங்கடசாமி பற்றி கூறியுள்ளார். தமிழனத்திற்குத் தேவையான பல்வேறுஆவணங்களைத் தொகுத்து ஆய்வு செய்யும் பணியை மேற்கொண்டதால் கூறியுள்ளார்.

## நான்கு மதிப்பெண் வினாக்கள்

1. பொருள் வேற்றுமை அணி :

அணி இலக்கணம்:

இருவேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப்பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

சான்று :

"ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்

அணிப்பொருத்தம் :

தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன்சார்ந்த ஒற்றுமையை முதலில் கூறி, அவற்றுள் தமிழ் தன்னேரில்லாதது என்ற தன்மையைப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவதால் இது பொருள் வேற்றுமை அணி ஆயிற்று.

2. நிரல்நிரை அணி :

அணி இலக்கணம் :

கவிஞர் தான் கூறும் பொருள்களையும் வரிசைப்படுத்தி அதன் பயனையும் பொருளுக்கேற்றவாறு வரிசைப்படுத்திக கூறுவதே நிரல்நிரை அணியாகும்.

சான்று :

" அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

அணிப்பொருத்தம் :

அன்பு, அறன் என்று முதலில் வரிசைப்படுத்தியவர் பின்னர் அன்புடைய வாழ்வு பண்புடையது என்னும் அறனுடைய வாழ்வு பயனுடையது என்றும் வரிசைப்படுத்திக்கூறியதால் இது நிரல்நரை அணி ஆயிற்று.

3. ஏகதேச உருவக அணி

அணி இலக்கணம் :

கவிஞர் தான் கூறும் பொருளில் ஒன்றை உருவகம் செய்து மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணியாகும்.

சான்று :

"சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்"

அணிப்பொருத்தம் :

கவிஞர் சினத்தை நெருப்பாக உருவகிக்காமல் இனத்தைத் தெப்பாக உருவகிப்பதால் இக்குறள் ஏகதேச உருவக அணியைச் சார்ந்ததாகும்.

4. உவமை அணி :

அணி இலக்கணம் :

உவமானம் ஒரு தொடராகவும்இ உவமேயம் மற்றொரு தொடராகவும் அமையஇ இடையில் உவம உருபு வெளிப்பட வருவது உவமை அணியாகும்.

சான்று :

"உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று"

அணிப்பொருத்தம் :

உவமானம் - குடங்கருள் பாம்போடு உடன்உறைதல்
உவமேயம் - உடம்பாடு இலாதவர் வாழ்க்கை
உவம உருபு - அற்று

உடன்பாடு இல்லாதவருடன் வாழ்வது பாம்புடன் குடிசையில் வாழ்வது போன்றது.

யானை புக்க நிலம்போலத் தானும் உண்ணான் - புறநானூறு

5. தொழில் உவமை அணி :

அணி இலக்கணம் :

ஒரு பொருளின் தொழில் அல்லது செயல்காரணமாக அமையும் உவமை தொழில் உவமை எனப்படும்.

சான்று : "அகலாது அணுகாது தீக்காய்வார் போலக்
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்"

அணிப்பொருத்தம் :

தீயினை மூட்டிக் குளிர் காய்பவர் அகலாது அணுகாது இருப்பது போல் அரசர்களைச் சார்ந்திருப்பவர் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும்இ என தீக்காய்வோர் செயலை அரசரைச் சார்ந்திருப்பவர் செயலுக்கு ஓப்புமை படுத்தியமையால் இது தொழில் உவமை அணி ஆயிற்று.

6. எடுத்துக்காட்டு உவமை அணி :

அணி இலக்கணம் :

உவமையையும் உவமேயத்தையும் இணைக்கின்ற உவமஉருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமை அணி எனப்படும்.

சான்று : துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்

அணிப்பொருத்தம் :

உவமை : துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லர்

உவமஉருபு : (போல) மறைந்து வந்துள்ளது

உறங்கியவர்இ இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர். (அதுபோல) கள்ளுண்பவரும் நஞ்சு உண்பவரே. இவ்வாறு உவமஉருபு மறைந்து வந்துள்ளமையால் இது எடுத்துக்காட்டு உவமை அணி ஆயிற்று.

7. சொற்பொருள் பின்வரும் நிலையணி :

அணி இலக்கணம் :

செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து தந்த பொருளையே தருமாயின் அது சொற்பொருள் பின்வரும் நிலையணி ஆகும்.

சான்று :

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

அணிப்பொருத்தம் :

இக்குறட்பாவில் 'பொருள்'' என்ற சொல் அதேபொருளில் மீண்டும் மீண்டும் வருவதால் இது சொற்பொருள் பின்வரும் நிலையணி ஆகும்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்
- சொற்பொருள் பின்வரும் நிலையணி.

# திணை & துறைகள்

1. பாடாண் திணை :

திணை விளக்கம் :

பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறுகளைப் பற்றிக் கூறுவது பாடாண் திணையாகும்.

ஒருவருடைய புகழ் இ வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

சான்று : "வாயிலோயே வாயிலோயே'"" எதை தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

திணைப்பொருத்தம் :

இப்பாடலின் அதியமான் நெடுமான் அஞ்சியின் அறிவார்ந்த சொற்களும் எண்ணியதை முடிக்கும் வலிமையும் வள்ளல்களின் சிறப்பை அறிந்து கொடையளிக்கும்தன்மையும் கூறப்பட்டதால் இப்பாடல் பாடாண் திணையைச் சார்ந்தாகும்.

2. பரிசில்துறை :

துறை விளக்கம் :

புலவர் அரசனின் சிறப்பையும் நாட்டின் சிறப்பையும் புகழ்ந்து பாடிய பின் பரிசில்வேண்டி வாயிலில் நிற்பது.

சான்று : "வாயிலோயே வாயிலோயே'." எனத் தொடங்கும் புறநானூற்றுப்பாடல்

துறை பொருத்தம் :

அதியமான் நெடுமான் அஞ்சியின் நாட்டையும் அவனது புகழையும் பாடிய ஔவையார் பரிசிலுக்காகக் காத்திருந்த நிலையைக் கூறுவதால் இப்பாடல் பரிசில்துறையைச் சார்ந்ததாகும்.

3. வாகைத் திணை :

திணை விளக்கம் :

போரில் வெற்றி பெற்ற அரசனின் வெற்றியைச் சிறப்பிப்பது வாகைத் திணையாகும். வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப் பூவை சூடி மகிழ்வது வாகைத்திணையாகும்.

சான்று :

"வையகம் பனிப்ப" ___ எனத் தொடங்கும் நெடுநல்வாடை பாடல்

திணைப் பொருத்தம் :

இப்பாடல் பாண்டியன் நெடுஞ்செழியனின் வெற்றிச் சிறப்புக்கள் பாடப்படுவதால் இது வாகைத் திணையாகும்.

4. கூதிர்ப் பாசறைத் துறை :

துறை விளக்கம் :

போர் மேற்சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கியிருக்கும் படைவீடு பற்றிக் கூறுவது கூதிர்ப் பாசறைத் துறையாகும்.

சான்று :

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
- நெடுநல்வாடை

துறை விளக்கம் :

போர் மேற்சென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் குளிர்காலத்தில் தங்கியிருந்த படைவீட்டின் குளிரின் தன்மையை பற்றி பாடியதால் இப்பாடல் கூதிர்ப் பாசறைத் துறையைச் சார்ந்ததாகும்.

**ஓம்சக்தி**

**ஆதிபராசக்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,மேல்மருவத்தூர்**